I Additional District Court, Thoothukudi.

O.S.No. 110/2021 நாள் : 04.12.2024 வா.சா.1– திருமதி. ஹேமா.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

நான் UK வில் இருக்கிறேன். தற்போது என் தாயார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். 1999ல் எனக்கு திருமணம் ஆனது. என் கணவர் UK வில் வேலை செய்து வருகிறார். எங்களுக்கு இரண்டு நாட்டிலும் குடியுரிமை உள்ளது. என் பிள்ளைகள் UK வில்தான் பிறந்து வளர்ந்தார்கள் என்றால் சரிதான். 2016ல் சென்னையில் பள்ளியில் படித்தார்கள். 1ம் பிரதிவாதியும், இறந்துபோன ரமேஷ் என்பவரும் என் உடன் பிறந்தவர்கள். என் தாயார், மேற்படி ரமேஷ், அவரது மனைவி, அவரது மகள் ஆகியோர் 2018–ல் விபத்தில் இறந்துவிட்டார்கள். அந்த விபத்தில் 2ம் பிரதிவாதி மட்டும்தான் பிழைத்துக் கொண்டார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தற்போது மேஜராகி பொறியியல் படித்து வருகிறார் என்றால் கேள்விப்பட்டேன். விபத்திற்கு பிறகு 2ம் பிரதிவாதியை அவரது தாய்வழி பாட்டனார் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். 07.04.2016–ல் எழுதப்பட்டதாக சொல்லப்படும் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் என் தகப்பனாருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் என் பாட்டனார் மூலமாக என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது. வா.சா.ஆ 1–ன் படி எனக்கு பாத்தியப்பட்ட ¼ பங்கை என் தாயாருக்கும், என் சகோதர்களுக்கும் நான் விடுதலை செய்து கொடுத்துவிட்டதாக கண்டுள்ளது. வா.சா.ஆ 1–ல் உள்ள கையொப்பங்கள் என்னுடையது என்றால் சரியல்ல. நான் பதிவாளர் அலுவலகத்திற்கு போனேன். அங்கு பதிவாளர் அலுவலகத்திற்குள் இரண்டு கையொப்பங்கள் மட்டும்தான் போட்டேன். நான் பத்திரத்தில் கையொப்பமிடவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் வழக்கறிஞர் அலுவலகத்தில்தான் கையொப்பமிட்டேன். நான் சொன்ன தகவலின்

அடிப்படையில்தான் நிரூபண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. அதில் வா.சா.ஆ 1–ஐ 07.04.2016–ல் நான் எழுதிக் கொடுத்ததாக ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் நான் ரத்து செய்யப்படவேண்டும் என்று பரிகாரமாக கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 1**. அதில் ஒவ்வொரு பக்கமும் ஹேமா என்று போடப்பட்டுள்ள கையொப்பங்கள் என்னுடையதல்ல. அதில் உள்ள புகைப்படங்கள் என்னுடையதுதான். அந்த புகைப்படங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் எடுக்கப்பட்டவை என்றால் சரிதான். அதில் அருகில் உள்ள இரண்டு கைரேகைகள் என்னுடையதுதான். புகைப்படங்களுக்கு அருகில் உள்ள இரண்டு கையொப்பங்கள் என்னுடையதுதான். அதனால் 07.04.2016 ல் நான் பதிவாளர் அலுவலகம் சென்று என் முழுமனதுடன் பி.சா.ஆ 1–ஐ எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் 2016 ல் UK விற்கு போய்விட்டேன் என்றால் சரிதான். பி.சா.ஆ 1 எழுதிக் கொடுத்த பிறகு UK போய்விட்டேன் என்றால் பதிவாளர் அலுவலகத்தில் கையொப்பம் போட்ட பிறகு UK சென்றுவிட்டேன். நான் கையொப்பமிட்ட கிழமை சனிக்கிழமை. என்னிடம் கடவுச்சீட்டு உள்ளது அதை பார்த்தால் பி.சா.ஆ 1 தேதியில் நான் சென்னைக்கு சென்று UK சென்றதாக தெரியவரும் என்றால் UK சென்றது தெரியவரும். பி.சா.ஆ 1–ல் நான்கையொப்பமிடவில்லை என்றும், என் தம்பி என்னை ஏமாற்றி கையொப்பம் பெற்றுக் கொண்டதாகவும் நான் சென்னை செல்லும் அவசரத்தில் கிரைய பத்திரம் என்று நம்பி அதில் கையொப்பமிட்டதாகவும், வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை. மேற்படி விபத்து 19.11.2018–ல் நடந்தது நான் 20.11.2018 ல் நான் இங்கு வந்தேன். பி.சா.ஆ 1–ஐ ஒரு வருடம் கழித்து வீட்டில் இருந்த நகலை பார்த்து தெரிந்துகொண்டேன். நான்

முழுமனதுடன்தான் பி.சா.ஆ1ஐ எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மனவளர்ச்சி குன்றிய நபர் என்றால் சரியல்ல. அவருக்கு திருமணமாகி விவாகரத்து ஆகிவிட்டது. அவரையும் நான் பராமரித்து வருகிறேன். 1ம் பிரதிவாதிக்கு 47 வயதாகிறது. அவர் ஆரோக்கியமான மனநிலையில் இருந்தால் யாருடைய உதவியும் அவருக்கு தேவையில்லை என்றால் அவருக்கு படிப்பு குறைவாக இருப்பதால் வெளி உலகம் தெரியாததால் அவருக்கு நான் ஆதரவாக இருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. 1ம் பிரதிவாதியால் யாரையும் பராமரிக்க முடியாது. வருவாய்துறை ஆவணங்கள் பி.சா.ஆ1ன் அடிப்படையில் என் சகோதரர்கள் பெயரில் மாறிவிட்டது என்றால் என் பெயரிலும் சேர்ந்து உள்ளது. பி.சா.ஆ1 நான் எழுதிக் கொடுத்த உடனே நடைமுறைக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ1ன் படி சொத்தில் இருந்த உரிமையை நான் விடுதலை செய்து கொடுத்த பிறகு என் தாயாரும், தம்பிகளும்தான் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல கூட்டாக அனுபவித்து வருகிறோம். என் தயார் இறந்த பிறகு வாரிசுகள் என்ற முறையில் 1, 2 பிரதிவாதிகள்தான் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.சா.ஆ1 ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றும் சொல்வதும், அது நடைமுறைக்கு வருவதற்கு முன்பாகவே என் தம்பி ரமேசும், தாயாரும் இறந்துவிட்டதால் பி.சா.ஆ1 செல்லத்தக்கதல்ல என்று சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. பி.சா.ஆ1 சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 5 ஆண்டுகள் கழித்து பி.சா.ஆ1ஐ ரத்து செய்ய வேண்டுமென்று தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு காலவரை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் எனது வழக்கறிஞர் திரு.மங்களா ஜவஹர்லால் மூலமாக பி.சா.ஆ1ஐ ஏற்றுக் கொண்டு செய்தித்தாள் அறிவிப்பு கொடுத்தேன் என்றால்

சரியல்ல.  அந்த அறிவிப்பு அ.வ.எண்.114/2020ல் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை குறியீடு செய்யும்போது நானும் நீதிமன்றத்தில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் என்றும், வழக்கறிஞர் குழும உறுப்பினராக இருந்தவர் என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி அ.வ.எண்.114/2020–ஐ தாக்கல் செய்யும் மனநிலை என் தம்பிக்கு இல்லை என்றும், நான்தான் அவரை என் கைப்பாவையாக வைத்துக் கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பாகத்தை நான் பெற்று அதை விற்று பணத்தை எடுத்துக் கொண்டு UK வில் நிரந்தரமாக குடியிருப்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடி ஆகவேண்டுமென்றால் சரியல்ல.

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2024.12.04 18:05:26 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.